பக்கங்கள் 18 + 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 23 புதன்கிழமை 25.02.2026 | அதிர்வு 208

## நாளை இருளில் மூழ்குமா நாடு?

### மின்சார சபை ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தம்

இலங்கை மின்சார சபையின் அனைத்துத் தொழிற்சங்கங்களும் இணைந்து நாளை

05

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



ஈஸ்டர் தாக்குதல் விசாரணையில் அதிரடித் திருப்பம்

# சுரேஷ் சலே இன்று கைது!

## நீண்டகால மர்மங்கள் உடையுமா?

இலங்கை வரலாற்றில் கறுப்பு அத்தியாயமான 2019 உயிர்த்த ஞாயிறு தினத் தொடர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் பாரிய திருப்புமுனையாக, அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே இன்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேலியகொட பகுதியில் 05

### அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர்

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது; 72 மணிநேரத் தடுப்புக் காவலில் விசாரணை!

### பொலிஸ் தலைமையகம் உத்தியோகபூர்வ அறிவிப்பு





அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இன்று நடைபெற்ற விசேட ஊடக வியலாளர் சந்திப்பில், 05



# ஜனநாயகத்தைப் பாதுகாக்க கைகோர்க்கும் எதிர்க்கட்சிகள்

## ரணிலுடன் பீரிஸ் தலைமையிலான குழு சந்திப்பு

நாட்டில் பல்லினக் கட்சி முறையிலான ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக, சிதறிக்கிடக்கும் அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைக்கும் விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று கொழும்பில் நடைபெற்றது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில், பல முக்கிய அரசியல் தலைவர்கள் கலந்துகொண்டு எதிர்காலக் கூட்டுப் பொறிமுறை குறித்து ஆராய்ந்தனர்.

தற்போதைய அரசின் பலமான ஆதிக்கத்திற்கு மத்தியில், பலவீனமடைந்துள்ள எதிர்க்கட்சிகளை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து, ஜனநாயக ரீதியிலான சமநிலையை உருவாக்குவதே இச்சந்திப்பின் பிரதான நோக்கமாகும்.

நாட்டில் பலமான எதிர்க்கட்சி ஒன்று இயங்க வேண்டும் என்றும், அதற்காக அனைத்துத் தலைவர்களும் ஒன்றிணைய வேண்டும் என்றும் மகா நாயக்க தேரர்கள் வழங்கிய ஆலோசனையைத் தொடர்ந்தே இந்த நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தப் புதிய கூட்டணி முயற்சிகளின் ஒரு கட்டமாக, ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாமல் ராஜபக்ஷ ஆகியோருடன் ஆரம்பகட்டப் பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன.

இன்றைய சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா,

"இலங்கையின் பல்லினக் கட்சி முறையை அழிந்துவிடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. கொள்கை ரீதியாக மாறுபட்டிருந்தாலும், ஜனநாயகத்தைப் பாதுகாக்க அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவது காலத்தின் கட்டாயமாகும்."
– என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், உதய கம்மன்பில, மஹிந்த அமரவீர, மஹிந்த அமரவீர, சாகல ரத்நாயக்க, தலதா அத்துகோரள, வஜிர அபேவர்தன உள்ளிட்ட சிரேஷ்ட அரசியல்வாதிகள் பலரும் பங்கேற்றனர்.

தற்போதைய அரசியல் சூழலில், அரசுக்கு நிகரான ஒரு பலமான மாற்று சக்தியாகத்திகழ இந்த "எதிர்க்கட்சிகளின் கூட்டு" அமையும் என்று சந்திப்பில் கலந்துகொண்ட முன்னாள் அமைச்சர்கள் நம்பிக்கை வெளியிட்டனர்.

# வெளிவிவகார அமைச்சர் நாளை ஜேர்மனி பயணம்

## வர்த்தக உறவுகளை வலுப்படுத்தத் திட்டம்

இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இரண்டு நாள் உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாளை வியாழக்கிழமை ஜேர்மனிக்குப் பயணம் செய்யவுள்ளார்.

ஜேர்மன் – ஆசிய பசிபிக் வணிக சங்கம் மற்றும் அதன் பிரெமன் அத்தியாயம் விடுத்த விசேட அழைப்பின் பேரில் இந்த விஜயம் அமையவுள்ளது.

ஆசிய பசிபிக் வணிக சங்கத்தின் பிரெமன் அத்தியாயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவில், ஆசியப் பிராந்தியத்தின் சார்பில் கௌரவ விருந்தினராகவும், முதன்மைப் பேச்சாளராகவும் அமைச்சர் விஜித ஹேரத் பங்கேற்கவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, ஜேர்மனிய அரசின் உயர்மட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து அவர் கலந்துரையாடவுள்ளார். குறிப்பாக, வர்த்தக மேம்பாடு மற்றும் இலங்கையர்களுக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக இச்சந்திப்புகளில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளது.

இலங்கையில் தற்போதுள்ள பொருளாதாரச் சூழல் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஜேர்மனிய வர்த்தகச் சமூகத்தினருக்கு விளக்கும் வகையில் பல தொடர் கூட்டங்களிலும் அவர் பங்கேற்கவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வடக்கின் விளையாட்டுத்துறையை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துங்கள்!

## 11 புதிய அதிகாரிகளுக்கு ஆளுநர் வேதநாயகன் பணிப்புரை



“அரச சேவை ஒரு வரப்பிரசாதம். அர்ப்பணிப்புடன் செயலாற்றி முன்மாதிரியாகத் திகழுங்கள். வடக்கு மாகாணத்தின் விளையாட்டுத்துறையை இன்னமும் மேம்படுத்தும் வகையில் உங்களின் சேவைகள் அமைய வேண்டும்.” – என்று புதிதாக நியமனம் பெற்ற விளையாட்டு உத்தியோகத்தர்களிடம் வலியுறுத்திய வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் மக்களும் மேலதிகாரிகளும் தங்கள் பிரதேசங்களுக்கு இந்த அதிகாரிகள்தான் வேண்டும் எனக் கேட்கும் நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் விளையாட்டு உத்தியோகத்தர் (தரம் III) சேவைக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 11 பேருக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்து உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர் மேலும் தெரிவிக்கையில்,

“ஆளணிப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வது தொடர்பில் மத்திய அரசாங்கத்திடம் நாம் தொடர்ச்சியாகக் கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றோம்.

எமது கோரிக்கைகளுக்கு அமைய அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு முழுமையான அனுமதிகள் கிடைக்காவிடினும், விளையாட்டுத் திணைக்களத்தில் நிலவிய 11 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி கிடைத்துள்ளமை பெரும் வரப்பிரசாதமாகும்.

தற்போதைய சூழ்நிலையில் அரச நியமனம் பெறுவது என்பது மிகவும் கடினமானதொரு காரியமாகும். உங்களுக்குக் கிடைத்துள்ள இந்த அரிய வாய்ப்பை நீங்கள் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அரச கடமைகளை ஏற்றதன் பின்னர், உங்களது பொறுப்புக்களை மிகுந்த ஈடுபாட்டுடனும் திறமையாகவும் முன்னெடுக்க வேண்டும். பலர் நியமனம் கிடைக்கும் வரை நாட்டின் எந்தப் பாகத்திலும் பணியாற்றத் தயார் எனக் கூறுகின்ற போதிலும், நியமனம் கிடைத்தவுடன் தங்களது வீடுகளுக்கு அருகாமையில் கடமையாற்ற விரும்புவதைக் காண முடிகின்றது. சிலர் இடமாற்றங்கள் கிடைக்காத பட்சத்தில் சேவையிலிருந்து விலகிச் சென்ற சம்பவங்களும் உண்டு. எனவே, இவ்வாறான நிலைமைகளைத் தவிர்த்து, நீங்கள் ஏனையோருக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும்.

தற்போது வடக்கு மாகாணத்தில் விளையாட்டுத்துறை பெரும் முன்னேற்றகரமான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. புதிதாக நியமனம் பெற்றுள்ள நீங்கள் பதினொரு பேரும் ஒன்றிணைந்து விளையாட்டுத்துறையை மேலும் பலப்படுத்தி முன்னகர்த்த வேண்டும்.” – என்றும் ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் விளையாட்டு உத்தியோகத்தர்கள் (தரம் III) சேவைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டதற்கு அமைவாக, தகுதியான 125 பேர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 20 பேர் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டு, அவர்களில் தகுதி பெற்ற 11 பேருக்கே நேற்று நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர், விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர்கள், புதிதாக நியமனம் பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பயங்கரவாதச் சித்தாந்தம் இன்னமும் அழியவில்லை!

## நாமல் உரை இரத்தானமை குறித்து சஞ்சீவ காட்டம்

இலங்கையில் பயங்கரவாதம் பௌதீக ரீதியாக அழிக்கப்பட்ட போதிலும், அதன் பின்னணியிலுள்ள சித்தாந்தம் சர்வதேச ரீதியில் இன்னும் மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் விளக்கு கையில்,

“உலகின் புகழ்பெற்ற ஒக்ஸ்போர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களின் மாணவர் சங்கங்களில் உரையாற்றுவதற்காக நாமல் ராஜபக்ஷவுக்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டது. இத்தகைய உயரிய வாய்ப்பு ஒருவருக்கு மிக அரிதாகவே கிடைக்கக்கூடியது. கருத்துச் சுதந்திரம் மற்றும் வெளிப்படையான உரையாடல் எனும் உன்னதக் கொள்கைகளின் அடிப்படையிலேயே இந்தப் பல்கலைக்கழகங்கள் இச்சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தன. எந்தவொரு பிரச்சினைக்கும் பேச்சின் மூலம் தீர்வு காண்பதற்கான




சிறந்த மேடையாகவே இதனை நாம் கருதினோம்.

இருப்பினும், புலம்பெயர் அமைப்புகளின் கடும் தலையீடுகள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக, நாமல் ராஜபக்ஷவின் உரை நிகழ்த்தும் வாய்ப்பு இறுதி நேரத்தில் பல்கலைக்கழக மாணவர் சங்கங்களால் இரத்து செய்யப்பட்டது. இந்தச் செயல்முறையை உன்னிப்பாக அவதானிக்கும் போது மூன்று முக்கிய அரசியல் உண்மைகள் புலப்படுகின்றன.

நாமல் ராஜபக்ஷ கட்டியெழுப்பியுள்ள அரசியல் ஆளுமைக்கும் அடையாளத்திற்கும் சர்வதேச அளவில் அங்கீகாரம் கிடைத்துள்ளதை இந்த அழைப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் பயங்கரவாதம் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டாலும், அதன் சித்தாந்தம் உலகெங்கிலும் இன்னும் உயிர்ப்புடன் இருப்பதை இந்தச் சம்பவம் நிரூபித்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான எமது அரசியல் முகாம் கொண்டுள்ள தேசியவாத கொள்கைகளுக்கு எதிராக எழும் இத்தகைய எதிர்ப்புகளை, எமது அரசியல் தத்துவத்திற்குக் கிடைத்த வெற்றியாகவே நாம் கருதுகின்றோம்.

இந்த ஒட்டுமொத்த நகர்வுகளும் இலங்கைக்கு எதிரான சர்வதேச சக்திகளின் செயற்பாடுகளை மீண்டும் ஒருமுறை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.” – என்றார்.

# அரசியல் பிரபலங்களைக் காப்பாற்ற மதுஷ் திட்டமிட்டுக் கொல்லப்பட்டாரா?

## மீண்டும் சூடுபிடிக்கும் விசாரணை

பாதாள உலகக் குழுவின் தலைவரும் சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரருமான மாக்கந்துரே மதுஷ், பொலிஸ் காவலில் இருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தற்போது விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் 20 ஆம் திகதி அதிகாலை, கொழும்பு – மாளிகாவத்தை அரச அடுக்குமாடி குடியிருப்பு தொகுதியில் வைத்து மதுஷ் சுட்டுக்கொல்லப்பட்டார். மறைத்து வைக்கப்பட்டிருந்த 22 கிலோ கிராம் ஹெரோயினை மீட்பதற்காக அழைத்துச் செல்லப்பட்டபோது, அங்கு ஒளிந்திருந்த எதிர்த்தரப்புக் குழுவினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் அவர் உயிரிழந்தார் என்று அப்போதைய பொலிஸ் தரப்பு அறிவித்தது.

இருப்பினும், பலத்த பாதுகாப்பு மற்றும் கைவிலங்கிடப்பட்ட நிலையில் இருந்த மதுஷ் மீது மட்டும் எவ்வாறு



துல்லியமாக துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது? என்பது இன்றும் விடை தெரியாத கேள்வியாகவே உள்ளது.

டுபாயில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட மதுஷ், 18 மாதங்கள் சி.ஐ.டி. காவலில் வைத்து விசாரிக்கப்பட்டார். அந்தச் சோதனைகளின் போது, சுமார் 80 இற்கும் மேற்பட்ட அரசியல்வாதிகள் மற்றும் சில அமைச்சர்களுடன் அவருக்கு இருந்த நெருக்கமான தொடர்புகள் குறித்த தகவல்கள் கசிந்தன.

இதனைத் தொடர்ந்து, விசாரணைகளை முன்னெடுத்த ஷானி அபேசேகர உள்ளிட்ட அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டதும், மதுஷ் திடீரென கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டதும் பெரும் சந்தேகங்களை ஏற்படுத்தின.

மதுஷுடன் தொடர்புடைய அதிகாரிகளையும் அரசியல்வாதிகளையும் பாதுகாப்பதற்காகவே இந்த ”திட்டமிட்ட கொலை” அரங்கேற்றப்பட்டது என்று சிவில் அமைப்புகள் தொடர்ச்சியாகக் குற்றம் சுமத்தி வந்தன.

ஐந்து ஆண்டுகள் கடந்தும் எவரும் கைது செய்யப்படாத நிலையில், மதுஷின் குடும்பத்தினர் மற்றும் சிவில் அமைப்புகளின் கோரிக்கைக்கு இணங்க தற்போது விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இந்தப் புதிய விசாரணையின் மூலம், மதுஷின் போதைப்பொருள் வலையமைப்பில் இருந்த அரசியல் புள்ளிகள் யார்? மற்றும் அவரது கோடிக்கணக்கான பெறுமதியான சொத்துக்கள் யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளன? போன்ற உண்மைகள் வெளிச்சத்துக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்கு தமிழகத்திலிருந்து 3,996 யாத்திரிகர்கள் வருகை!

(ந.லோகதயாளன்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் கலந்துகொள்வதற்காக, தமிழகத்திலிருந்து 3 ஆயிரத்து 996 யாத்திரிகர்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

வரலாற்றுப் புகழ்பெற்ற கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா, நாளைமறுதினம் கொடியேற்றத்துடன் கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளது. இந்த ஆன்மீக நிகழ்வில் பங்கேற்பதற்காகவே தமிழகத்திலிருந்து பெருமளவிலான பக்தர்கள் கடல் வழியாக வருகை தருகின்றனர்.

இம்முறை தமிழகத்திலிருந்து மொத்தம் 3 ஆயிரத்து 996 யாத்திரிகர்கள் வருகை தரவுள்ளனர் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

92 விசைப்படகுகளில் 3 ஆயிரத்து 589 பேரும், 26 நாட்டுப் படகுகளில் 307 பேரும் பயணிக்கவுள்ளனர்.

தமிழகத்திலிருந்து புறப்படும் யாத்திரிகர்கள் நாளைமறுதினம் காலை இராமேஸ்வரத்தில் முறையான சோதனைகளை முடித்துக்கொண்டு கச்சதீவு நோக்கிப் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளனர். இதற்கான முன்னேற்பாடாக, அவர்கள் பயணிக்கவுள்ள அனைத்துப் படகுகளையும் பரிசோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் இன்றும் நாளையுமாக இராமேஸ்வரத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை கடற்படை மற்றும் மாவட்ட செயலகம் இணைந்து யாத்திரிகர்களுக்கான குடிதண்ணீர், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு வசதிகளைக் கச்சதீவில் ஏற்கனவே தயார் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பயங்கரவாதத் தடை...

மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஜீவ மெதவத்த மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜாலிய சேனாரத்ன ஆகியோர் இது குறித்த மேலதிக விவரங்களை வெளியிட்டனர்.

2019 உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அண்மையில் கிடைத்துள்ள புதிய மற்றும் வலுவான சாட்சியங்களின் அடிப்படையிலேயே சுரேஷ் சலே கைது செய்யப்பட்டுள்ளார்.

“இச்சம்பவம் குறித்து மிக நீண்ட மற்றும் ஆழமான விசாரணை நடத்தப்பட வேண்டியுள்ளது. இதன் காரணமாகக் கைதுக்கான முழுமையான காரணங்களை இப்போதே பகிரங்கப்படுத்த முடியாது” என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஜீவ மெதவத்த குறிப்பிட்டார்.

“பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தற்காலிக விதிகளின் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளதால், அவரை 72 மணிநேரம் (3 நாட்கள்) தடுத்து வைத்து விசாரணை செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு கிடைத்துள்ளது. விசாரணைகளின் முன்னேற்றம் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில், தேவைப்படின் மேலதிக தடுப்புக் காவல் உத்தரவைப் பெற்றுக் கொள்ளவும் சட்டத்தில் இடமுண்டு.” – என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜாலிய சேனாரத்ன விளக்கமளித்தார்.

சுரேஷ் சலேயிடம் முன்னெடுக்கப்படும் தீவிர விசாரணைகளின் ஊடாக, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னணியில் இருந்த உண்மையான சூத்திரதாரிகள் மற்றும் அதன் மறைமுகத் தொடர்புகள் குறித்த இரகசியங்களை வெளிப்படுத்த முடியும் எனப் பொலிஸ் தரப்பு பலமான நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

சுரேஷ் சலே கைது செய்யப்பட்ட விதம் குறித்து சமூக வலைத்தளங்களில் எழுந்துள்ள விமர்சனங்களுக்குப் பதிலளித்த சஜீவ மெதவத்த,

“அவரை நாம் கைது செய்யாமல் இருந்திருந்தால்தான் பொலிஸாருக்கு எதிராக விமர்சனங்களும் பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். பொலிஸார் தமது கடமையைச் சட்டத்திற்கு உட்பட்டுச் சரியாகச் செய்துள்ளனர்” என்று குறிப்பிட்டார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசேட குழுவொன்று சுரேஷ் சலேயிடம் வாக்குமூலங்களைப் பெற்று வருவதுடன், தாக்குதல் தொடர்பான கோப்புகளுடன் அவரது தொடர்புகளை ஒப்பிட்டு மீளாய்வு செய்து வருகின்றது. இந்த விசாரணை முடிவுகளின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

### நாளை இருளில்...

வியாழக்கிழமை அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளன என்று உத்தியோகப்பூர்வமாக அறிவித்துள்ளன.

நாளை நண்பகல் 12:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை, சுமார் 6 மணித்தியாலங்களுக்கு இந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தமது நீண்டகாலக் கோரிக்கைகளை வலியுறுத்தியும், அவற்றுக்கு உரிய தீர்வுகள் வழங்கப்படாமையைக் கண்டித்தும் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மின்சார சபை தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த 6 மணிநேரப் பணிப்புறக்கணிப்பு காரணமாக, இலங்கை மின்சார சபையின் நாளாந்தப் பராமரிப்புப் பணிகள், நுகர்வோர் சேவை நிலையங்களின் செயற்பாடுகள் மற்றும் அவசரத் திருத்தப் பணிகளில் பாரிய பாதிப்புகள் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இருப்பினும், மின் விநியோகத் தடைகள் ஏற்படாத வண்ணம் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பது குறித்துத் தொழிற்சங்கங்கள் மற்றும் அதிகாரிகள் மத்தியில் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமது கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்காவிடின், எதிர்வரும் நாள்களில் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தவுள்ளதாகவும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எச்சரித்துள்ளனர்.

### சுரேஸஷ் சலே...

வைத்து இடம்பெற்ற இந்த அதிரடிக் கைது, நாட்டின் பாதுகாப்பு மற்றும் அரசியல் களத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் திட்டமிடப்பட்ட போது, தாக்குதல்தாரிகளுக்கும் பாதுகாப்புத் தரப்பின் சில உயர்மட்ட அதிகாரிகளுக்கும் இடையே தொடர்பு இருந்ததாகப் பல தரப்பினரும் சந்தேகம் வெளியிட்டு வந்தனர். குறிப்பாக, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கத்தோலிக்க திருச்சபை சார்பில் சுரேஷ் சலேயின் பெயர் பலமுறை பகிரங்கமாகக் குறிப்பிடப்பட்டது.

பிரித்தானியாவின் ‘சனல் 4’ தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணப்படத்தில், சுரேஷ் சலேவுக்கும் தாக்குதல்தாரிகளுக்கும் இடையிலான சந்திப்புகள் குறித்துத் திடுக்கிடும் தகவல்கள் வெளியிடப்பட்டன. தாக்குதல்களை முன்னெடுப்பதன் மூலம் நாட்டில் ஓர் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த அவர் முயன்றார் என்ற குற்றச்சாட்டு சர்வதேச அளவில் பேசுபொருளானது. இருப்பினும், அவர் அப்போது அக்குற்றச்சாட்டுகளை அடியோடு மறுத்திருந்தார்.

2019 ஏப்ரல் மாதம் தாக்குதல் இடம்பெற்றபோது, சுரேஷ் சலே மலேசியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் ஆலோசகராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அங்கிருந்தபடியே அவர் தாக்குதல்தாரிகளுடன் தொடர்புகளைப் பேணினாரா? என்ற கோணத்தில் தற்போது சி.ஐ.டி. விசாரணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசு, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னணியில் உள்ள ‘முக்கிய மூளை’யைக் கண்டறிந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதாகத் தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தது. இந்தக் கைது நடவடிக்கை அந்த வாக்குறுதியை நோக்கிய ஒரு முக்கிய நகர்வாகப் பார்க்கப்படுகின்றது.

தாக்குதலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரித் தொடர்ந்து போராடி வரும் கத்தோலிக்க திருச்சபை மற்றும் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, நீண்டகாலமாகச் சுதந்திரமான விசாரணைக்கு வலியுறுத்தி வந்த நிலையில், இந்த நடவடிக்கை முக்கியத்துவம் பெறுகின்றது.

கைது செய்யப்பட்டுள்ள சுரேஷ் சலே, தற்போது இரகசிய இடமொன்றில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார் என்று தெரிகின்றது. அவர் விரைவில் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ள நிலையில், அவரிடம் பெறப்படும் வாக்குமூலங்கள் மூலம் இந்தத் தாக்குதலின் பின்னணியில் இருந்த ஏனைய உயர்மட்ட நபர்கள் குறித்த விவரங்கள் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நிலக்கரி ஊழல்

மின் உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி விடயத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஊழல், முறைகேடு பற்றிய விவகாரம் இலங்கையின் அரசியலில் இப்போது பெரும் சர்ச்சையாக மாறியிருக்கின்றது.

நிலைமையைச் சமாளிப்பதற்காக, இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி கப்பல்களில் தேவையான கலோரிபிக் (ஒரு யூனிட் அளவு எரிபொருள் அல்லது உணவின் முழுமையான எரிப்பு மூலம் வெளியாகும் மொத்த வெப்ப ஆற்றல்) மதிப்பு தரத்தை விட குறைவான தரம் கொண்ட நிலக்கரி வந்து சேர்ந்து உள்ளது என்பதை அரசு ஒப்புக் கொண்டுள்ளது. அதற்காக அந்த கப்பல்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு இருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அறிவித்திருக்கிறார்.

முதலாவது கப்பலுக்கு மாத்திரம் 20 லட்சத்து 70 ஆயிரம் அமெரிக்க டொடர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அவரின் அறிவிப்பின்படி ஆறு கப்பல்களின் இறக்குமதிக்கும் மொத்தமாக 43 லட்சத்து 47 ஆயிரத்து 450 டொலர் (சுமார் 135 கோடி ரூபா) அபராதம் விதிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த விவகாரத்தால் நாட்டின் மின்சாரத் துறை மீண்டும் ஒரு மோசமான கொந்தளிப்பை எதிர்கொள்கிறது. நிலக்கரி கொள்முதல் விடயத்தில் கடுமையான முறைகேடுகள் இடம்பெறுகின்றன என மின்சாரத் துறைத் தொழிற்சங்கங்கள் குற்றம் சாட்டி வருகின்றன.

நாடு மிகப் பலவீனமான பொருளாதார நிலைமையிலிருந்து மீளுவதற்காகத் தடுமாறிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் எரிசக்தித் துறை ‘தவிர்க்கக் கூடிய வாய்ப்புகளைப் புறம்தள்ளி மிகவும் ஆபத்தான நெருக்கடியை’ நோக்கித் தள்ளப்படுகிறது என இலங்கை மின்சார சபையின் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் கோசல அபேசிங்கே கவலை தெரிவிக்கின்றார்.

‘நிலக்கரி ஊழல்’ விவகாரம் மின்சாரத் துறைக்குள் கடுமையான கவலைகளை உருவாக்கியுள்ளது என்று அபேசிங்கே குற்றம் சாட்டினார்.

“நிலக்கரி கொள்முதல் செயல்முறையைச் சுற்றிக் கடுமையான கேள்விகள் உள்ளன. இந்த முறைகேடுகள் உடனடியாக விசாரிக்கப்பட்டுசரிசெய்யப்படாவிட்டால், இறுதியில் நிதிச் சுமை இந்த நாட்டு மக்கள் மீது விழும்.” - என்கிறார் அவர்.

இலங்கையின் மின்சார விநியோகத்தில் நிலக்கரி மூலமான மின் உற்பத்தி ஒரு முக்கிய தூணாக உள்ளது. கொள்முதல் அல்லது விலை நிர்ணயத்தில் ஏற்படும் எந்தவொரு இடையூறும் உற்பத்திச் செலவுகளை அதிகரிக்கும். மற்றும் நுகர்வோர் கட்டணங்களை மோசமாகப் பாதிக்கும் விளைவுகளை ஏற்படுத்தும். அதனால் நாட்டின் மிக மோசமான பொருளாதாரம் மேலும் அதலபாதாளத்தில் வீழும் என்ற சாரப்பட்ட எச்சரிக்கையை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

அவர் குறிப்பிடுகின்றமை போல, இது, வெறும் கேள்விப் பத்திர ஒப்பந்தப் பிரச்சினை மட்டுமல்ல, அதனையும் தாண்டி, இது மின்சாரக் கட்டணங்கள், விநியோக நிலைத்தன்மை மற்றும் மில்லியன் கணக்கான குடிமக்களின் பொருளாதார நல்வாழ்வை நேரடியாக பாதிக்கும் விவகாரம்.

ஊழல், முறைகேடுகளை ஒழிப்போம் என்று கூறி ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி, கண்ணுக்கு முன்னால் இடம்பெறும் இந்த முறைகேடு குறித்து என்ன செய்யப் போகின்றது?



# நாகர் கோவில் பிள்ளையார் ஆலயத்தில் நன்னீர் மீன்பிடி தொழிலாளர் அநாகரீகம்!

(பூ.லின்ரன்)

யாழ். வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் தெற்கு சுடலைபிட்டி பிள்ளையார் கோவில் ஆலய வளாகத்தில் அப்பகுதியில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் தொழிலாளர்கள் அநாகரிக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஆலயத்தின் புனிதத் தன்மையை மதிக்காமல் போதைப்பொருள் பாவனைகளில் ஈடுபடுதல் மற்றும் தமது மீன் பிடி உபகரணங்களை ஆலயத்தில் உட்புகுத்தி வைத்தல் தமது வாகனங்கள் ஆலய வளாகத்தில் நிறுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்களுக்கும் மற்றும் ஆலய புனித பூமியை அசிங்கப்படுத்தும் நபர்களுக்கும் எதிராக ஆலய தொண்டர்கள் வன்மையாக கண்டனங்கள் தெரிவித்துள்ளனர்.





# அல்-குர்ஆனை மனனம் செய்தோருக்கு சைக்கிள்கள் வழங்கிக் கௌரவிப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ் )

மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசலில் இயங்கிவரும் அந்நூர் கல்வி நிறுவகத்தில் அல் – குர்ஆன் முழுவதையும் மனனம் செய்த ஹாபிழ்கள் மற்றும் 15, 10, 5 ஜுஸ்உகள் (அல்குர்ஆனின் சில பகுதிகள்) மனனம் செய்தவர்களைப் பாராட்டிக் கௌரவிக் கும் நிகழ்வு அந்நூர் கல்வி நிலையத் தின் உப தலைவரும் பல் வைத்திய நிபுணருமான டாக்டர் எம்.ஐ.எம். ஹபீல் தலைமையில் மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் ஜும்ஆ தொழு கையின் பின்னர் நடைபெற்றது.

2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அந்நூர் கல்வி நிறுவகமானது ஆன்மீக லௌகீக கல்வியறிவை போதித்து வரு வதுடன் அதன் ஒரு அங்கமாக 2018 ஆம் ஆண்டு தொடக்கம் பகுதி நேர அல்குர்ஆன் மனனப் பிரிவு ஆரம்பிக் கப்பட்டது. இந்நிலையில், அந்நூர் கல்வி நிலையத்தின் முதலாவது ஹாபிழ் என்ற மகுடம் சூடிய மாணவன் அல்ஹாபிழ் எம்.எச். ஹம்தான் 2025 ஆம் ஆண்டு நினைவுச் சின்னம் வழங்கி பொன்னாடை போர்த்தி சைக் கிள்கள் பரிசாக வழங்கப்பட்டது. இதன் போது இந்த மாணவனின் பெற்றோரும் பொன்னாடை போர்த்திப் பாராட்டி கௌர விக்கப்பட்டனர்.

இரண்டாம் தடவையாக இன்று அந்நூர் கல்வி நிலையத்தின் இரண்டா வது, மூன்றாவது ஹாபிழ்கள் என்ற மகுடம் சூடிய நிஹால் மொஹமட் தக் கிய சாலிஹ், அய்யுப்கான் அஹ்மத் அம்ஹர் ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி, சைக்கிள்களும் வழங்கிப் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை, 15 ஜுஸ்உகளை மன னம் செய்து கொண்ட மாணவன் மொஹமட் புழையில் அப்துரஹ்மான், 10 ஜுஸ்உகளை மனனம் செய்த மாணவன் அஹ்மத் அஸீம் பிலால், 05 ஜுஸ்உகளை மனனம் செய்த மாணவர்களாக யஹ்சர் அபான் டிஸ் னித் முஹம்மத், முஹம்மத் சபீக் யஹ்யா அக்தீஸ், முஹம்மத் வக்கீல் அஹ்மத் சயான் ஆகியோரும் இங்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக் கப்பட்டனர்.

இந்த நிகழ்வின் மஸ்ஜிதுல் கபீர் பெரிய ஜும்மா பள்ளிவாசலின் பேஷ் இமாம் அஷ்- ஷெய்க் ஏ.ஆர் பைஸ ல் கியாஸ் (பலாஹி), அந்-நூர் கல்வி நிர்வாகத்தின் உஸ்தாத் மார்களான அல்-ஹாபிழ் எம்.எச்.எம்.றாயிஸ் (ஷர்க்கி) , அல்- ஆலிம் எம்.ஐ.எம். நுஸ்கி (ஸாபிதி), அல்-ஹாபிழ் எம். எல்.எம்.உஸ்மான் (நூரி), அல்-ஹாபிழ் எம்.எஸ் .பஹீம் அஹ்மத் (ஹாஷிமி), மற்றும் ஊரின் உலமாக்கள், கபீர் பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகத் தினர், மரைக்கார் மார், பொதுமக்கள், நலன் விரும்பிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாணவர்களை வழிப்படுத்தி அல்-குர்ஆனை போதித்து வரும் உஸ்தாத் மார்களும் பொன்னாடை போர்த்தி பாராட்டி கௌரவிக்கப்பட்ட னர்.

# கைதடி வடக்கு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்யுங்கள்!

## சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சிவபாதம் கோரிக்கை

(த.சுபேசன்)

கைதடி வடக்கு பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அமைப் பதற்கென கைதடி வடக்கைச் சேர்ந்த அன்பர் ஒருவரால் நன்கொடையாக வழங்கப்பட்ட காணியில் கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கீடு வழங்க வேண் டும் என்று வடக்கு ஆளுநர் மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலர் ஆகி யோரிடம் சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் க.சிவபாதம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பிய கோரிக்கைக் கடிதத்தில்,

கைதடி வடக்கில் குடும்பநல உத்தி யோகத்தர் அலுவலகம், பிணியாய்வு



நிலையம் உள்ளிட்டவை ஏறத்தாழ 33 ஆண்டுகளுக்கு மேலாக தற்காலிக இடங் களில் மாறி மாறி இயங்கி வருகின்றன.

கைதடி வடக்கில் ஆரம்ப சுகாதர நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் என்பது மிகவும் அவசியமானது. இதனூ டாக கைதடி வடக்கு, கைதடி கிழக்கு, கைதடி மத்தி, கைதடி தென்கிழக்கு அத்துடன் கைதடி தெற்கு, கைதடி மேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக் கும் பயனடைவார்கள்.

நிரந்தர கட்டடம் இல்லாத நிலையில் ஆரம்ப சுகாதார நிலையம் கைதடி வடக்கு மாதர் சங்க கட்டடத்தில் பல இன்னல்களும் மத்தியில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

எனவே நன்கொடையாக கிடைத்த காணியில் நிரந்தர கட்டடம் அமைப்ப தற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய தென்மராட்சி பிரதேச செயலர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார்.



# மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டார் இலங்கைக்கான பிரித்தானிய உதவித் தூதர்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாருக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான பிரித்தானிய உதவித் தூதர் திரேஸா மகானி நேற்று செவ் வாய்க்கிழமை மன்னாருக்கு வருகை தந்த நிலையில், மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது இலங்கைக்கான பிரித் தானிய உதவி தூதர் திரேஸா மகானி மற்றும் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினரு இடையில் விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.

கலந்துரையாடலில் மன்னார் மாவட்டத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பாக அவர் கேட்டறிந்தார். குறிப் பாக வட மாகாண ரீதியில் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

மேலும் மன்னாரில் அபிவிருத்தி என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுத் திட்டங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடினார். மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள இராணுவ பொலிஸ் சோதனை சாவடி தொடர்பாக வும் இதனால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாகவும் இலங்கைக் கான பிரித்தானிய உதவி தூதர் கேட்டறிந்து கொண்டார்.



# ஞானச்சுடர் மாசி மாத மலர் வெள்ளிக்கிழமை வெளியீடு!

சைவகலை பண்பாட்டுப் பேரவை யின், சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகன தாஸ் சுவாமிகள் தலைமையில், இடம் பெறவுள்ள ஞானச்சுடர் மாசி மாத 338 ஆவது மலர் வெளியீடு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெற வுள்ளது.

வெளியீட்டுரையை சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி சிந்துரா கலியுகவரதனும் மதிப்பீட்டு ரையை ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி புனிதவதி சண்முகலிங்கனும் நிகழ்த் தவுள்ளனர். அதனைத் தொடர்ந்து சிறப்புப்பிரதிகளும்வழங்கப்படவுள்ளன.




# இலங்கை முன்பள்ளிக் கல்வி மேம்பாடு தொடர்பாக லண்டனில் கலந்துரையாடல்

(த.சுபேசன்)

இலங்கையின் முன்பள்ளிக் கல்வி மேம்பாடு பற்றிய கலந்துரையாடல் நிகழ்வு, அரும்பு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு அமைப்பின் ஆதரவில் அண்மையில் லண்டனில் உள்ள உயர் வாசற்குன்று முருகன் ஆலய மண்டபத்தில் லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் தேவ சகாயம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தமிழ் பேசும் மக்களின் நிலைக்குழு அமைப்பின் தலைவர் ரி. சிவகுமார் மற்றும் திருமதி சுவர்ணா சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக லண்டன் கற்பக விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வசந்தன் குருக்கள், உயர் வாசற்குன்று முருகன் ஆலய தலைவர் செ.கனகசுந்தரம், லண்டன் சைவ முன்னேற்றச் சங்க தலைவர் மா. இந்து சேகரன், லண்டன் ஸ்ரீ சக்தி கணபதி ஆலயத்தைச் சேர்ந்த க. பரமநாதன், லண்டன் சைவ முன்னேற்ற சங்க அறங்காவலர் சூ.பாலசிங்கம், கலாநிதி ச.பரமலிங்கம், விமர்சகர் மு.நித்தியானந்தன், அரும்பு அமைப்பின் தலைவர் ந.சச்சிதானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது தாயகத்தில் 50 வருடங்களுக்கு மேலாக தமிழ் பேசும் பகுதிகளில் முன்பள்ளி கல்வி தொடர்பாக எழும் சவால்களுக்கான தீர்வு திட்டங்கள் தொடர்பாகப் பேசப்பட்டது. குறிப்பாக இலங்கையின் தமிழ் பேசும் பகுதிகளில் உள்ள முன்பள்ளிகளின் ஆசிரியர்களுடைய கல்வி தரம், அவர்களுடைய மாதாந்த ஊதியம், ஓய்வூதியம், விடுமுறை, முன்பள்ளி சிறார்களுடைய சத்துணவு, முன்பள்ளிகளின் பௌதீக வளக்குறைபாடு மற்றும் முன்பள்ளி கல்வியை இலங்கை அரசு தேசிய மயமாக்கும்வரை அதனை மேம்படுத்துவதில் புலம்பெயர் உறவுகளுடைய பங்களிப்பு ஆகிய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

# பொருத்தமற்ற இடத்தில் எருமைகளை வளர்த்தவருக்கு எதிராக நடவடிக்கை!



(பாறுக் ஷிஹான்)

மனித குடியேற்றத்துக்கு அருகாமையில் பொருத்தமற்ற இடத்தில் எருமை மாடுகளை வளர்த்த நபருக்கு எதிராகச் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை மாலை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டுதலின் பேரில் சாய்ந்தமருது பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுற்றுச்சூழல் பிரிவுக்குப் பொறுப்பான சாய்ந்தமருது பொலிஸ் அதிகாரி மற்றும் டெங்கு கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள் இணைந்து சம்பந்தப்பட்ட இடத்தில் பரிசோதனை மேற்கொண்டனர்.

இதன்போது மனித குடியேற்றத்துக்குப் பொருத்தமற்ற இடத்தில் எருமை மாடுகளை வளர்த்து வந்த இடம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்துத் தொடர்புடைய நபருக்கு எதிராக பொதுமக்கள் தொல்லை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்ய சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது.

அசௌகரியங்களும் தொந்தரவுகளும் அயல் வீட்டாருக்கு ஏற்பட்டமை தொடர்பாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றதை தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# தென்மராட்சி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி கண்காட்சி

வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்திய கண் காட்சி இன்று புதன்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் எவ்.சி. சத்தியசோதி தலை மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக் கள மாகாணப் பணிப்பாளர் திருமதி பா. கஜானியும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி நிருபராஜ் லாகினி, சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் பொன்னையா குகதாசன், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோ கத்தர் திருமதி சுனேத்திரா சுதாகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஆடை வடிவமைத் தல் மற்றும் அழகுக்கலை, மனைப் பொருளியல் போன்ற பிரிவுகள் இடம் பெற்றுவருகின்றன.







# நலிவுற்ற குடும்பங்களுக்கான நலத் திட்டங்கள் கையளிப்பு!

நோர்வே நாட்டின் VGS உயர் நிலைக் கல்லூரி மாணவர்களின் நிதி அனுசரணையில் RAHAMA மற்றும் FORUT நிறுவனங்களின் ஒருங்கிணைப்பில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் வேம்போடுகேணி, கச்சார்வெளி, கோவில்வயல், கிளாலி, முகமாலை அல்லிப்பளை ஆகிய கிராமங்களில் நலிவுற்ற குடும்பங்களுக்கான நலத்திட்டங்கள் கையளிக்கும் நிகழ்வு முகமாலை சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் நாகசெல்வன் தலைமையில் நேற்று முகமாலை கிராம செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 20 தற்காலிக வீடுகள், 20 மலசலகூடங்கள், 4 கிணறுகள் மற்றும் 12 மாணவர்களுக்கான சைக்கிள்கள் என்பன கையளிக்கப்பட்டன.

தொடர்ந்து, வழங்கப்பட்ட நலத் திட்டங்களைப் பார்வையிடும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு RAHAMA மற்றும் FORUT நிறுவனங்களின் பிரதிநிதி அனி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் எஸ். ஜெயசீலன், நோர்வே நாட்டின் Asane Folk High School ஆசிரியர்கள் மற்றும் மாண வர்கள், நிறுவனங்களின் பிரதிநிதிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம மட்ட உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பயனாளிகள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பங்குபற்றினர்.













# திருமலை பண்ணையாளர்களுக்கு இரண்டாம் கட்ட இழப்பீடு வழங்கல்

(அபு அலா)

திருகோணமலை மாவட்ட பண்ணையாளர்களுக்கான இரண்டாம் கட்ட இழப்பீடு வழங்கும் நிகழ்வு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயதலால் ரத்னசேகர தலைமையில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட பண்ணையாளர்களின் நலனுக்காக அரசால் இதுவரை மொத்தம் 558.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக இரண்டாம் கட்ட இழப்பீடாக 281 பயனாளர்களுக்கு 232,148,750 ரூபா நிதி பகிர்ந்தளிக்கப்பட்டது. இதில் கிண்ணியா பிரதேசம் அதிக இழப்பீட்டுத் தொகையை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கிண்ணியா பிரதேசத்திலுள்ள 209 பயனாளிகளுக்கு 211,528,750 ரூபாவும், பதவிசிரியபுர பிரதேசத்திலுள்ள 25 பயனாளிகளுக்கு 7,473,500 ரூபாவும், தம்பலாகமம் பிரதேசத்திலுள்ள 18 பயனாளிகளுக்கு 6,490,000 ரூபாவும், கந்தளாய் பிரதேசத்திலுள்ள 10 பயனாளிகளுக்கு 5,341,000 ரூபாவும், பட்டணமும் சூழலும் பிரதேசத்திலுள்ள 18 பயனாளிகளுக்கு 1,288,000 ரூபாவும், மொரவெவ பிரதேசத்தில் ஒரு பயனாளருக்க 27,500 ரூபாவும் வழங்கி வைக்கப்பட்டது.

இவர்களுக்கான காசோலைகள் கிழக்கு மாகாண ஆளுநர் ஜேந்தலால் ரத்னசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, மாகாண கால்நடை திணைக்கள மாகாண பணிப்பாளர் எம்.ஏ.எம்.சுல்பிஹார் அபூபக்கர் ஆகியோரால் வழங்கி வைக்கப்பட்டன.







# இரு புனிதத் தளக் காப்பாளரின் இப்தார் திட்டம் ஆரம்பித்து வைப்பு!

(அபு அலா )

இலங்கையில் 1447ஆம் ஹிஜ்ரி ஆண்டுக்கான 'இரு புனிதத் தளங்களின் காப்பாளரின்' இப்தார் திட்டத்தை உத்தியோ கபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் விசேட இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

இந்தியாவிலுள்ள இரு புனிதத் தளங்களின் காப்பாளரின் தூதரகத்தின் மார்க்க விவகார இணைப்பாளரின் ஊடாக, இஸ்லாமிய விவகாரங்கள் அமைச்சு ஏற்பாடு செய்த இந்த விசேட இப்தார் நிகழ்வுக்கு சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல்-கஹ்தானி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இந்த நிகழ்வில், மத மற்றும் கலாசார அலுவல்கள் பிரதியமைச்சர் முனீர் முளஃபர், இஸ்லாமிய நிலையங்கள் மற்றும் சங்கங்களின் அதிகாரிகள், மார்க்க அறிஞர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.



# நலன் சார்ந்த விடயங்கள் குறித்த கலந்துரையாடல்!

(அபு அலா)

சவூதி அரேபியா தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானிக்கும், இலங்கையிலுள்ள செஞ்சிலுவைச் சர்வதேச தூதுக்குழுவின் தலைவர் செல்வி அஞ்சலிக் அப்பேருக்கும் இடையிலான சந்திப்பு சவூதி அரேபியா தூதரகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, பொது நலன் சார்ந்த விடயங்கள் குறித்து இருதரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.









# கிவுல் ஓயா திட்டத்தால் பறிபோகும் எமது நிலத்தை காப்பாற்றுங்கள்!

## தமிழ் அரசியல் தலைமைகளிடம் மக்கள் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

கிவுல் ஓயா திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டால், எல்லைக் கிராமங்களில் நாங்கள் வாழ்வதில் பயனில்லை. நாங்கள் ஒட்டுமொத்தமாக வெளியேறும் நிலையே உருவாகும் என முல்லைத்தீவு எல்லைக் கிராமத்தை சேர்ந்த மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தின் ஒழுங்கமைப்பில் 'கிவுல் ஓயா அபாயத்தின் குறியீடா' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும்போதே மக்கள் பிரதிநிதி ஒருவர் மேற்கண்டவாறு கூறியுள்ளனர். இதன்போது மேலும் அவர் கூறுகையில்,

1984 ஆம் ஆண்டு எமது பிரதேசங்களை விட்டு நாங்கள் வெளியேறி வெளிமாவட்டங்களில் வாழ்ந்த நிலையில் 2012 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்தபோது நாங்கள் விவசாயம் செய்த ஐந்து குள காணிகள் முற்றுமுழுதாக பறிக்கப்பட்டிருந்தன.

ஊரின் பற்றால் நாங்கள் அங்கு வாழ்ந்தோமே தவிர அங்கு எமது வாழ்வாதார நிலங்கள் அனைத்துமே பறிக்கப்பட்டன.எங்கள் நிலங்களைப் பறிப்பதற்காகவே மகாவலி எல் வலயம் உருவாக்கப்பட்டது.

அந்த குள காணிகளை விடுவிப்பதற்கு அப்போது இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பல முயற்சிகளை எடுத்த போது மகாவலி அதிகார சபை விட்டுத்தர ஒப்புக் கொண்டிருந்த போதும் அப்போதிருந்த அரச அதிபரின் அக்கறையில்லாத செயல்பாட்டால் அந்த முயற்சி தோல்வி அடைந்தது.

அப்போது அக்கறையுடன் செயல்பட்டு இருந்தால் ஒரு குளத்தையாவது மீட்டிருக்க முடியும். கிவுல் ஓயா என்று எங்கள் காணிகள் அனைத்தும் பிடிக்கப்பட்டால் எங்கள் காணியை விட்டு நாங்கள் முற்று முழுதாக வெளியேற கூடிய நிலை உருவாகும்.

எல்லோருக்குமே கிவுல் ஓயா என்ற பெயரை மட்டுமே தெரியும். அங்கு நடைபெறுகின்ற விடயங்கள் மிக மோசமாக காணப்படுகிறது. பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் தொடர்ச்சியான முயற்சியால் நாங்கள் இன்று வரைக்கும் அந்த கிராமத்தில் வாழக்கூடிய சூழல் இருக்கிறது.

கிவுல் ஓயா திட்டம் நடைமுறைக்கு வந்தால் நிச்சயமாக நாம் அங்கிருந்து பிரயோசனமில்லை. கிவுல் ஓயாத் திட்டத்தின்படி மின் வேலி அமைக்கிறார்கள். அந்த மின் வேலி அமைத்தால் எமது முக்கிய வாழ்வாதாரமான கால்நடைகள் பாதிக்கப்படும். மாடு அங்காலே செல்ல முடியாது.

மழையை நம்பியே நாங்கள் விவசாயம் செய்கிறோம். விவசாய நிலங்களிலே எந்த அபிவிருத்தியையோ செய்து தர மகாவலி அதிகார சபை ஏற்றுக் கொள்ளாது. அரச உத்தியோகத்தர்களுக்கு விருப்பு இருந்தா லும் மகாவலி அதிகார சபையின் தலையீட்டால் அபிவிருத்தி செய்யப்படுவதில்லை.

கம வீதிகளை அபிவிருத்தி செய்து தந்தால் நாங்கள் நிலைத்து விடுவோம் என்ற காரணத்தால் ஏதாவொரு வகையில் எங்களை துன்பப்படுத்தி அந்த கிராமத்திலிருந்து வெளியேற்றுவது அரசின் நோக்கம். பிரதேச செயலாளரால் எங்களுக்கான காணிக்குரிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

அந்த பத்திரங்களின் உறுதியை தரலாம் என்று பொய் சாட்டு சொல்லி மீளவும் அரசாங்கத்தால் பெற்றுக் கொள்ளப்பட்டது. இன்று வரைக்கும் அந்த அனுமதி பத்திரங்கள் திரும்பி வ ழங்கப்படவில்லை.

அதனை மகாவலியுடன் இணைத்து நாயாற்றுக்கு அங்காலே உள்ள மக்களை முற்றுமுழுதாக வெளியேற்றுவது அவர்களின் நோக்கம். அந்த கிராமத்தின் பரம்பரையாளர்கள் பலரும் வயது வந்து இறந்து வருகிறார்கள்.

அந்த கிராமத்தில் இருந்து வெளியேறும்போது எனக்கு 17 வயது. தற்போது 60 வயதாகிறது. போராட்ட காலங்களில் தொடர்ச்சியாக அங்கு தொடர்பு இருந்தபடியால் இன்று வரைக்கு அதை விட்டுப் போகவில்லை. மண் பற்றோடு இருக்கிறோம். இருக்கிறோம்.

இளம் சமுதாயத்துக்குக் கிராமப் பற்று குறைந்து கொண்டு செல்கிறது. அக்கறையில்லாமல் இருந்தால் எமது நிலம் எம்மைவிட்டுப்போகும்.

யாழ்ப்பாண மக்களுக்கு 3000 ஏக்கர் காணி இருக்கிறது. எம்மிடம் பட்டியல் இருக்கிறது. யாழ்ப்பாண த்தில் பலரைத் தேடித் தெரிந்தும் ஒரு குடும்பத்தையே சந்தித்திருக்கிறேன்.

அனுமதிப்பத்திர இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் போன்ற விபரங்கள் இருந்தாலும் அவர்களைத் தொடர்பு கொள்வதற்கு பல முயற்சிகளை எடுப்பதுடன் நாங்கள் வெளிநாடுகளில் தொடர்பு கொண்டு முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

அவர்களுடைய காணிகளை அபகரிப்பதற்கான முயற்சி நடக்கிறது. அங்குள்ள பெருமளவு காணி யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களின் காணி என்பது தெரியும். அவர்கள் வரமாட்டார்கள் என்றும் தெரியும்.

அந்த காணிகளை முக்கியமாக பிடிக்க வேண்டும் என்பதே அவர்களின் நோக்கம். எங்கள் கிராமம் உண்மையில் விடுபடுமாக இருந்தால் எத்தனையோ விடயங்கள் செய்யமுடியும். அந்த இடத்தை விடக்கூடாது என்பதற்காக போராடுகிறோம். பல துன்பங்களை கடந்து போராடுகிறோம்.– என்றார்.






## ‘கேரளம்’ ஆகிறது கேரளா:

# பெயர் மாற்றத்தை செய்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்



கேரளாவின் பெயரை கேரளம் என மாற்ற மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

கேரளாவின் பெயரை கேரளம் என மாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்கக் கோரி கேரள சட்டப்பேரவையில் கடந்த 2024, ஜூன் 24 அன்று ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய முதல்வர் பினராயி விஜயன்,

“இந்த மாநிலம் மலையாளத்தில் கேரளம் என்றே அழைக்கப்படுகிறது. மலையாளம் பேசும் மக்களுக்காக ஒன்றுபட்ட கேரளத்தை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை சுதந்திரப் போராட்ட காலத்தில் இருந்தே வலுவாக எழுந்துள்ளது. ஆனால், அரசமைப்பின் முதல் அட்டவணையில் மாநிலத்தின் பெயர் கேரளா என்றே எழுதப்பட்டது.

எனவே, அரசமைப்பின் 3 ஆவது பிரிவின் கீழ் கேரளம் என்று திருத்தம் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், அரசியலமைப்பின் 8 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மொழிகளிலும் கேரளா என்று உள்ளதை கேரளம் என மாற்றவும் மத்திய அரசை இந்த சட்டமன்றம் கேட்டுக்கொள்கிறது.” என வலியுறுத்தினார்.

இந்த தீர்மானத்தின் மீது மத்திய அமைச்சரவை இன்று ஆலோசனை மேற்கொண்டது. சமீபத்தில் திறக்கப்பட்ட புதிய பிரதமர் அலுவலக கட்டிடமான சேவா தீர்த்தத்தில் முதல் முறையாக மத்திய அமைச்சரவைக் கூடி இது குறித்து ஆலோசித்தது. முடிவில், மாநிலத்தின் பெயரை கேரளா என்பதில் இருந்து கேரளம் என மாற்ற மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மத்திய அமைச்சரவையின் ஒப்புதலை அடுத்து, கேரளா (பெயர் மாற்றம்) மசோதா 2026 ஐ, குடியரசு தலைவர், கேரள சட்டப்பேரவையின் ஒப்புதலுக்கு அனுப்பி வைப்பார். கேரள மாநில சட்டப்பேரவையின் ஒப்புதலை அடுத்து, பெயர் மாற்ற மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப் படும். மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, அது குடியரசு தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்படும். குடியரசுத் தலைவரின் ஒப்புதலை அடுத்து பெயர் மாற்றம் நடைமுறைக்கு வரும்.

கேரளாவில் விரைவில் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், மாநில பெயர் மாற்றம் முக்கிய நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது.

கடந்த 2023, ஒகஸ்ட்டில் இதேபோன்ற ஒரு தீர்மானம் கேரள சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அந்த தீர்மா னத்தை ஆராய்ந்த மத்திய உள்துறை அமைச்சகம் அதில் சில தொழில்நுட்ப மாற்றங்களை பரிந்துரைத்தது. அதன் காரணமாக, 2024 இல் கேரள சட்டப்பேரவையில் புதிதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# தி.மு.கவின் ஆட்சியில் நல்லாட்சி நடக்கவில்லை

## சசிகலா குற்றச்சாட்டு



தி.மு.க. ஆட்சியில் நல்லாட்சி நடக்கவில்லை தமிழ்நாட்டு மக்கள் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்று சசிகலா தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கோட்டைமேடு பகுதியில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த நாளை முன்னிட்டு அ.தி.மு.க. முன்னாள் பொதுச்செயலாளர் வி.கே.சசிகலா தலைமையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவில், வி.கே.சசிகலா உரையாற்றுகையில்,

“தி.மு.க. ஆட்சியில் நல்லாட்சி நடக்கவில்லை. தமிழ்நாட்டு மக்கள் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது அவர்கள் என்றும் நம்மை கைவிட மாட்டார்கள். புதிய கட்சியை விரைவில் ஆரம்பிக்கப்போகிறோம். இது ஒருதிராவிட கட்சியாக அண்ணா, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா வழியில் ஏழை எளிய சாமானிய மக்களுக்கு ஆதரவாகவும் கட்சி இருக்கும்.

எதிரிகள் துரோகிகளை வேரறுக்கும் கட்சியாக அது இருக்கும். தற்போது கட்சி கொடியை மட்டும் அறிமுகம் செய்கிறேன். கருப்பு வெள்ளை சிவப்பு வண்ணத்தில் அண்ணா, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா உருவம், அந்த கொடியில் இருக்கும். கட்சியின் பெயரை மட்டும் விரைவில் அறிவிக்கிறேன்.”என்று தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவிடம் இந்தியாவை பிரதமர் மோடி விற்றுவிட்டார்

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு

பிரதமர் நரேந்திர மோடி நமது நாட்டை அமெரிக்காவிடம் விற்றுவிட்டார் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட காணொலி பதிவில்,

“அவமானம் குறித்து நீங்கள் (மோடி) பேசுகிறீர்கள். அவமா னத்தின் அர்த்தத்தை நான் உங்களுக்கு சொல்கிறேன். அமெரிக்காவின் பாலியல் வன் கொடுமை குற்றவாளி எப்ஸ்டீன் தொடர்பான கோப்புகளில் உங்கள் பெயர், உங்கள் அமைச் சரின் பெயர், உங்கள் நண்பரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. மிகவும் மோசமான குற்றவாளி யுடன் உங்களது பெயர்கள் தொடர்புபடுத்தப்பட்டு இருக்கிறது. இதுதான் உண்மையான அவ மானம்.

அமெரிக்காவுடன் நீங்கள் மேற்கொள்ள இருக்கும் வர்த்தக ஒப்பந்தம் மூலம் நமது நாட்டையே அமெரிக்காவிடம்



விற்றுவிட்டீர்கள். இது மிகவும் வெட்கக்கேடானது. நமது நாட்டின் தரவுகளை அமெரிக்கா விடம் ஒப்படைத்து உள்ளீர்கள். விவசாயிகள், ஆடை தொழிலை நீங்கள் அழித்துவிட்டீர்கள்.

அமெரிக்காவில் அதானிக்கு எதிராக நடைபெறும் வழக்கு உங்களை தூங்கவிடாமல் செய்திருக்கிறது. இந்த வழக்கு பா.ஜ.க. மற்றும் உங்கள் நிதி கட்டமைப்புக்கு எதிரான வழக்கு ஆகும். நீங்களும் உங்கள் நண்பர்கள் அனில் அம்பானி, அதானியும் உங்களுக்கு விருப்ப மானதை செய்யுங்கள். நானும் காங்கிரஸ் தொண்டர்களும் நாட்டைப் பாதுகாப்போம்.” என்று தெரிவித்துள்ளார்.

# இரண்டு நாள் உத்தியோகப்பூர்வ பயணமாக இஸ்ரேல் புறப்பட்டார் இந்திய பிரதமர் மோடி



இரண்டு நாள் உத்தியோகப்பூர்வ பயணமாக பிரதமர் நரேந்திர மோடி இஸ்ரேலுக்கு புறப்பட்டுள்ளார். இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி இன்று உரை நிகழ்த்துகிறார். இதன்மூலம், இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தும் முதல் இந்திய பிரதமர் என்ற பெருமையை மோடி பெறுகிறார்.

ஈரான் – அமெரிக்கா இடையேயான மோதல் போக்கால் மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், இரண்டு நாள் பயணமாக பிரதமர் நரேந்திர மோடி இன்று இஸ்ரேல் புறப்பட்டுச் சென்றார். தனது இஸ்ரேல் பயணத்தை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“எனது அன்பு நண்பர் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அழைப்பின் பேரில், இஸ்ரேலுக்கு இரண்டு நாள் உத்தியோகப்பூர்வ பயணம் மேற்கொள்ள உள்ளேன்.

சமீபத்திய ஆண்டுகளில் குறிப் பிடத்தக்க வளர்ச்சியையும், சுறுசுறுப்பான, வலுவான, பன்முக மூலோபாய கூட்டாண் மையையும் இந்தியாவும் இஸ்ரேலும் பகிர்ந்து கொள்கின்றன. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், புதுமை, விவ சாயம், நீர் மேலாண்மை, தொழில்நுட்பம், பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் முதலீடு, மக்களிடையேயான உறவுகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் பிரதமர் நெதன்யாகுவுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ள இருக்கிறேன். பரஸ்பர ஆர்வமுள்ள பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் நாங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வோம்.

இந்த பயணத்தின்போது, இஸ்ரேல் ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக்கைச் சந்திக்க உள்ளேன். மேலும், இஸ்ரேலிய நாடாளு மன்றமான நெசெட்டில் உரையாற்றும் முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமை யையும் நான் பெறுவேன். நமது இரு நாடுகளையும் இணைக்கும் வலுவான நாடாளுமன்ற மற்றும் ஜனநாயக உறவுகளுக்கு மரியாதை அளிப்பதாக இது இருக்கும்.

இந்தியா – இஸ்ரேல் இடையே சிறப் பான நட்பை நீண்ட காலமாக வளர்த்து வரும் இந்திய புலம்பெயர்ந்தோருடன் கலந்துரையாடுவதை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

எனது உத்தியோகப்பூர்வ பயணம் இரு நாடுகளுக்கும் இடையிலான பிணைப்புகளை மேலும் பலப்படுத்தும், மூலோபாய கூட்டாண்மைக்கான புதிய இலக்குகளை அமைக்கும், நெகிழ்ச்சி யான, புதுமையான மற்றும் வளமான எதிர்காலத்திற்கான நமது பகிரப்பட்ட பார்வையை மேம்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்காவில் வரலாறு காணாத பனிப்பொழிவு; 6 லட்சம் வீடுகள் இருளில்: 5,700 விமானங்கள் ரத்து



அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் பல தசாப்த கால சாதனை களை முறியடிக்கும் வகையில் பனிப் பொழிவு பதிவாகியுள்ளது.

இதனால் போக்குவரத்து, மின்சாரம் மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

தேசிய வானிலை ஆய்வு மையத்தின் தரவுகளின்படி, ரோட் தீவு மற்றும் மசா சூசெட்ஸ் ஆகிய மாநிலங்களின் சில பகுதிகளில் சுமார் 37 அங்குல பனிப் பொழிவு பதிவாகியுள்ளது.

இந்த மாநிலத்தின் வரலாற்றி லேயே மிக மோசமான பனிப்புய லாக இது பதிவாகியுள்ளது.

இதற்கமைய பனிப்புயல் காரணமாக சுமார் 6,00,000 இற்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் மின்சாரமின்றி இருளில் மூழ்கியுள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக் கின்றன.

அமெரிக்காவிற்கு உள்ளேயும் வெளியேயும் சுமார் 5,700 இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய் யப்பட்டன.

இந்தநிலையில் ரோட் தீவு, கனெக்டிகட் மற்றும் மசாசூசெட்ஸ் ஆகிய மாநிலங் களில் அத்தியாவசியமற்ற பயணங்களுக் குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.



# மெக்சிகோவில் வன்முறை; 23 கைதிகள் தப்பியோட்டம்

மெக்சிகோவின் “ஜாலிஸ்கோ நியூ ஜெனரேசன் கார்டெல்” அமைப்பின் தலைவர், படையினரால் கொல்லப்பட்டமைக்கு எதிராக பழிவாங்கல் வன்முறைகள் தொடர்கின்றன.

நெமேசியோ ஒசெகுவேரா செர்வாண்டஸ் எனப்படும் எல் மென்சோ பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதற்குப் பழிவாங்கும் விதமாக அந்த அமைப்பினர் நடத்திய தொடர் தாக்குதல்களில், புவேர்ட்டோ வல்லார்ட்டா சிறையிலிருந்து 23 கைதிகள் தப்பியோடியுள்ளனர்.

ஆயுதம் ஏந்திய குழு ஒன்று, வாகனம் ஒன்றினால், சிறை வாசலை மோதித் தகர்த்து 23 கைதிகள் தப்பிச் செல்ல வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

தப்பியோடியவர்களைப் பிடிக்க பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தநிலையில் எல் மென்சோ கொல்லப்பட்டதன் பின்னர் வெடித்த வன்முறையில் 25 தேசிய பாதுகாப்புப் படை வீரர்கள் உட்பட 70 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

மெக்சிகோவின் தேடப்படும் மிக முக்கிய குற்றவாளியான இவர், CJNG என்ற சர்வதேச போதைப்பொருள் கடத்தல் அமைப்பை வழிநடத்தி வந்தார்.

இந்த அமைப்பு மெக்சிகோ முழுவதும் போதைப்பொருள் உற்பத்தி மற்றும் கடத்தலில் ஈடுபடுவதுடன், பாதுகாப்புப் படையினர் மீது மிகக் கொடூரமான தாக்குதல்களையும் நடத்தி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.









கனடா முரசு

புதன்கிழமை | 25/02/2026

## கியூபாவிற்கு உதவிகளை அனுப்பத் திட்டமிடும் கனடா



02



# இந்தியா – கனடா உறவில் புதிய திருப்பம் தஹாவூர் ராணாவின் கனடா குடியுரிமை ரத்து

கனடா பிரதமர் மார்க் கார்னியின் இந்திய விஜயத்துக்கு முன்னதாக, மும்பை பயங்கரவாத தாக்குதலில் முக்கிய பங்கு வகித்த தஹாவூர் ராணாவின் குடியுரிமையை ரத்து செய்ய கனடா அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

மஹாராஷ்டிர மாநிலம் மும்பையில், 2008இல் நடந்த பயங்கரவாத தாக்குதலில், 166 பேர் பலியாகினர். இந்த சதி திட்டத்தில் முக்கிய பங்கு வகித்ததாக பாகிஸ்தானில் பிறந்த தஹாவூர் ராணா (வயது 64) மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

02

# இணைய விற்பனையாளர்களுக்கு எட்மண்டன் நகரில் எச்சரிக்கை




கனடாவின் எட்மன்டன் நகரில் இணைய வழி மூலமான விற்பனைக்கான சந்திப்புகளின் போது இடம்பெற்ற கொள்ளை சம்பவங்களைத் தொடர்ந்து, ஒன்லைன் விற்பனையாளர்கள் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த ஒரு மாதத்தில் கிஜி மற்றும் முகநூல் சந்தை Facebook Marketplace வழியாக ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்புகளில் குறைந்தது 15 கொள்ளை சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த சம்பவங்களில் அதிக மதிப்புள்ள பொருள்கள் குறிப்பாக் கைப்பேசிகள் மற்றும் பிரபல ஆடைகள் குறிவைக்கப்பட்டுள்ளன.

வாங்குபவராக நடிக்கும் நபர் முதலில் விற்பனையாளரை சந்தித்து பொருளை பரிசோதிப்பார். பின்னர் குறைந்தது ஒருவராவது கூட்டாளி சேர்ந்து, விற்பனையாளரை மிரட்டி பொருளை பறித்துச் செல்கிறார்கள்.

சில சந்தர்ப்பங்களில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதுடன், ஒரு சம்பவத்தில் துப்பாக்கியும் காட்டப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த தொடர் சம்பவங்களில் ஒன்றுடன் தொடர்புடைய மூன்று இளைஞர்கள்

02





# கியூபாவிற்கு உதவிகளை அனுப்பத் திட்டமிடும் கனடா

கனடிய அரசாங்கம் கியூபாவிற்கு உதவிகளை வழங்குவதற்கான திட்டத்தை முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான ஓர் பின்னணியில் கனடாவிற்கான கியூபா தூதுவர் ரொட்ரிகோ மெல்மெரிக்கா டயஸ் நாடாளுமன்ற வெளிநாட்டு விவகாரக் குழுவின் முன் சாட்சியம் அளிக்க உள்ளார்.

அமெரிக்காவின் எண்ணெய் தடையால் கியூபாவில் கடுமையான மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார அழுத்தம் கரீபியன் தீவு நாட்டின் கொம்யூனிஸ்ட் ஆட்சியை கவிழ்க்கக்கூடும் என ட்ரம்பிற்கு நெருக்கமான அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில், மெக்ஸிகோ கியூபாவுக்கு உணவு மற்றும் மருந்துகள் அடங்கிய மனிதாபிமான உதவிப் பொருள்களை அனுப்பியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, புளொக் கியுபிகோ மற்றும் என்.டி.பி கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒட்டாவாவும் இதேபோன்று நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, கியூபாவுக்கு உதவுவதற்கான திட்டம் தயாராகிக் கொண்டிருக்கிறது என வெளிநாட்டு விவகார அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

எனினும், திட்டம் தொடர்பான மேலதிக விவரங்களை வெளியிட முடியாது என கூறியுள்ளார்.

---

**இந்தியா - கனடா...**

**(A1ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இவர், 1997ஆம் ஆண்டு வட அமெரிக்க நாடான கனடாவுக்கு குடி பெயர்ந்து, அந்நாட்டு குடியுரிமை பெற்றவர்.

மற்றொரு வழக்கில், ராணா, 2019 இல் கைது செய்யப்பட்டு அமெரிக்க சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

கடந்த ஆண்டு இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டு, சிறையில் உள்ளார். இந்நிலையில், தஹாவூர் ராணாவின் குடியுரிமையை ரத்து செய்யும் நடவடிக்கை எடுத்துள்ளதாக கனடா கூறியுள்ளது.

கடந்த, 2000 இல் குடியுரிமைக்கு விண்ணப்பித்தபோது, பொய் தகவல்கள் கொடுத்ததால், அவரது குடியுரிமை ரத்து செய்யப்படுவதாக கனடா கூறியுள்ளது.

முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ காலத்தில், கனடா – இந்தியா இடையேயான உறவு மோசமடைந்தது. தற்போதைய கனடா பிரதமர் மார்க் கார்னி இந்தியா உடனான உறவை மீண்டும் வலுப்படுத்த விரும்புகிறார்.

அவர் இந்தியா வர உள்ள நிலையில், ராணாவின் கனடா குடியுரிமை ரத்து செய்வதற்கான நடவடிக்கை குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

---

**இணைய...**

ஜனவரி மாத இறுதியில் கைது செய்யப்பட்டு, திருட்டு குற்றச்சாட்டில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அறிமுகமில்லாதவர்களை சந்திக்கும் போது எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பான, பொதுமக்கள் நிறைந்த இடங்களில் சந்திக்கவும், ஒருவரை கூடவே அழைத்து செல்லவும் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் உடனே விற்பனை செயல்முறையை கைவிடுங்கள் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இணைய வழி விற்பனை செய்யும் கனடியர்கள் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என பொலிஸார் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.



# திருடப்பட்ட 43 வாகனங்கள் மீட்பு பிரிட்டிஷ் கொலம்பியா துறைமுகத்தில்

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண துறைமுகத்தில் கோடிக்கணக்கான டொலர் மதிப்பிலான திருடப்பட்ட வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்துடன் ஒன்டாரியோவை தளமாகக் கொண்ட அமைப்பு சார்ந்த குற்றக் குழு தொடர்புடையது என விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டு தொடங்கிய இந்த விசாரணையில் வாகனத் திருட்டு மற்றும் போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுகளில் 30 பேருக்கு எதிராக 200 இற்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த கூட்டு விசாரணையை நயாகரா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். பறிமுதல் செய்யப்பட்ட ஆதாரங்கள், குறிப்பாக பல மின்னணு சாதனங்கள் மீதான விரிவான நுண்ணறிவியல் ஆய்வுகள் மூலம் முக்கிய தகவல்கள் கண்டறியப்பட்டுள்ளன.

குிப்பாக பிரிட்டிஷ் கொலம்பிய துறைமுகத்தில் வெளிநாடுகளுக்கு அனுப்பத் தயாராக இருந்ததாக நம்பப்படும் 43 திருடப்பட்ட வாகனங்கள் (மதிப்பு சுமார் 3.8 மில்லியன் டொலர்) கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒன்றாரியோவைச் சேர்ந்த கெயர் மெக்கால், ஹமில்டனைச் சேர்ந்த 32 வயதான டியூடர் சோப்டீரியன், எடோபிகொக் பகுதியைச் சேர்ந்த 43 வயதான டேஜன் ஸ்லோஜோ ஆகியோர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

# குழந்தைகளுக்கான பால் மா குறித்து வெளியான எச்சரிக்கை அறிவிப்பு




கனடா முழுவதும் உள்ள கொஸ்ட்கோ விற்பனை நிலையங்களில் விற்கப்பட்ட குழந்தை பால் மாவு தயாரிப்புகள் அவசரமாக மீளப்பெறப்பட்டுள்ளன.

கென்டாமில் என்ற பிரிட்டனைச் சேர்ந்த நிறுவனத்தின் இரண்டு தொகுதி குழந்தை பால் மாவுகளில் 'செரியூலைடு' எனப்படும் நச்சு பொருள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

கனடிய உணவு ஆய்வு நிறுவனம் Canadian Food Inspection Agency (CFIA) இது குறித்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

இந்த நச்சு, பாசிலுஸ் சிரியுஸ் என்ற பாக்டீரியாவின் சில வகைகளால் உற்பத்தி செய்யப்படுகிறது.

இது உட்கொள்ளப்பட்டால் 30 நிமிடங்களுக்குள் வயிற்று வலி, வாந்தி உணர்வு, வாந்தி, வயிற்றுப்போக்கு போன்ற குடலியல் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், 'செரியூலைடு' அதிக வெப்பத்தையும் தாங்கக்கூடியது என்பதால், பால் மாவை சூடாக்கினாலும் இந்த நச்சு அழிக்கப்பட வாய்ப்பில்லை.

குறிப்பாக இளம் குழந்தைகளில் இது நீர்ச்சத்து இழப்பு போன்ற கடுமையான விளைவுகளுக்கு வழி வகுக்கலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

"மீளப்பெறப்பட்ட தயாரிப்புகளை உட்கொள்ள வேண்டாம், வழங்க வேண்டாம், பயன்படுத்த வேண்டாம், விற்க வேண்டாம் அல்லது விநியோகிக்க வேண்டாம். அவற்றை குப்பையில் போடவும் அல்லது வாங்கிய இடத்திற்குத் திருப்பி ஒப்படைக்கவும்," என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த பால் மாவை குழந்தை உட்கொண்டு உடல்நலக்குறைவு ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகப்பட்டால் உடனடியாக மருத்துவ நிபுணரை அணுகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.